ISSN:2582-9599



# முட்டையில் ஓட்டைகள்

முனைவர் ஆ.மெர்சி ஆஞ்சலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி, மதுரை - 18
mercyanjela@gmail.com

54

**ஆய்வுச் சுருக்கம்**

மனித மனங்களைச் செம்மைப்படுத்தும் இலக்கிய வகைகளுள் ஒன்றே நாடகங்களாகும். புதினங்கள், வரலாற்று நூல்கள், குறுநாவல்கள், கட்டுரைகள், நாடகங்கள் என்று பல்வேறு தளங்களில் ஆணித்தரமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் எழுத்தாளர் பிரபஞ்சன் ஆவார். சமூக அநீதிகளை உள்ளபடியே வெளிக்காட்டியவர். டில்லி பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள இவரது முட்டை நாடகம் சமூக அவலங்களைச் சுட்டிக்காட்டுகிறது. அதிகார வர்க்கத்தின் பிடியில் சிக்குண்டு தவிக்கின்ற ஏழைகள், பெண்கள், விளிம்பு நிலை மக்கள் போன்றோரின் மனக்குமுறலை வெளிப்படுத்தி சமூக மாற்றத்திற்கான எழுச்சியை வாசகர் உள்ளத்திலே ஆழப்படுத்துகின்றார். முட்டை நாடகத்தில் வெளிப்படுகின்ற சமூகச் சிக்கல்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

முட்டை நாடகம், பிரபஞ்சன், கோழிச்சண்டை, வன்முறை எண்ணம், பெண்களை இழிவு செய்தல், அதிகார வர்க்கத்தின் ஆணவம், பாலியல் வன்முறை.

**முன்னுரை**

தமிழ் நாடகத்திற்குத் தொன்மை வரலாறு உண்டு. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நாடகக்கலை மக்களிடையே வழக்கிலிருந்தது. சங்க இலக்கியம் குறிப்பிடும் பாணர், கூத்தர், விறலியர் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கியமை இதனை மெய்ப்பிக்கின்றது. பழமையான நாடக இலக்கண நூல்கள் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன. காலங்காலமாக மன்னர்களும் மக்களும் நாடகத்திற்குச் சிறப்பிடம் அளித்து வந்துள்ளனர். அந்த வரிசையில் பிரபஞ்சனின் முட்டை மேடை நாடகமாக மட்டுமல்லாது நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன. சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த இவரது படைப்பில் சமூக அவலங்கள் வெளிப்படுவதைக் காணலாம். இதனை முட்டை நாடகம் வழி ஆய்ந்து கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மனிதம் இழந்த மனிதர்கள்**

முட்டை நாடகம் ஐந்து காட்சிகளுடன் குறுகிய வடிவில் அமைந்தாலும் அதில் பொதிந்துள்ள சமூக அவலம் குறித்தப் பதிவுகள் சமூக மாற்றத்திற்கான தூண்டுதலை நம்மில் எழ வைப்பதாக அமைகிறது. நாரதர் போன்று மற்றவர்களிடத்து கலகமட்டி வேடிக்கை பார்க்கும் மனம் கொண்ட மனிதர்கள் வாழ்கின்ற இச்சமூகத்தில் தனக்குத் தொடர்பில்லாதவர்கள் சண்டையிடுவது

இவர்களுக்குக் குதூகலத்தை ஏற்படுத்தும். சைக்கிளில் வந்த இளைஞன் முட்டை வியாபாரியான முனுசாமியின் மீது மோத முட்டையெல்லாம் உடைந்துவிடுகிறது. இருவருக்குமிடையே வாக்குவாதம் நிகழ்கிறது. இறுதியில் அவர்கள் சமரசத்திற்கு உடன்பட, வழிப்போக்கர்களாக வந்த நால்வர் அவர்களை மோத விட்டு வேடிக்கை பார்க்க வேண்டுமென்று துடிக்கின்றனர்.

“முத : ரத்தம் பீறிட்டு அடிக்கிற மாதிரி

இரண்: பல்லு வாயெல்லாம் உடையற மாதிரி

மூன் : கை காலெல்லாம் உடைஞ்சு தொங்கற மாதிரி

நான் : மூளை சிதறி மண்ணில் விழற மாதிரி;” (முட், ப.18)

இருவரும் மோதிக் கொள்ளுங்கள் என்கின்றனர். வன்முறை எண்ணம் கொண்ட இவர்கள் தாங்கள் முன்பு பார்த்து ரசித்த கோழிச்சண்டை குறித்தும் விவாதிக்கின்றனர். கோழிச்சண்டை தமிழர்களின் வீர விளையாட்டுகளுள் ஒன்றாகும். எனினும் வாயில்லா உயிரினங்களை இரத்தம் சிந்த போராடவிட்டு வேடிக்கை பார்ப்பது மனிதாபிமானமற்ற செயல்பாடாகும். குறுந்தொகை, திருமுருகாற்றுப்படை, பட்டினப்பாலை போன்ற இலக்கியங்களில் கோழிச்சண்டை குறித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

“குப்பைக் கோழி தனிப்போர் போல்” 1

“உறைக் கிணற்றுப் புறச்சேரி

மேழகத் தகரோடு சிவல் விளையாட்டு;” 2

வெற்றிமாறன் இயக்கத்தில் தமிழில் வெளிவந்த ஆடுகளம் திரைப்படம் சேவல் விளையாட்டை மையமிட்டு எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சூதாட்டம் போன்று இந்த விளையாட்டு மாறியதன் காரணமாக இரு பிரிவினரிடையே சண்டை நிகழ்ந்ததன் காரணமாகக் காவல்துறை இதற்குத் தடை விதித்துள்ளது.

முட்டை நாடகத்தில் ராவுத்தர் கோழியும் நாய்க்கரு கோழியும் சண்டையிட்ட நிகழ்வு வழிப்போக்கர்களின் விவாதத்தில் இடம்பெறுகிறது.

“கடைசியா ராவுத்தர் கோழி ஒரு ஜகாட் வாங்கி அடிச்சது பாரு, ராவுத்தர் கோழியோட கண் காலி. முகமெல்லாம் கொண்டை மாதிரி சிவந்துபோயி ராவுத்தர் கோழி அவரைத் திரும்பி திரும்பி பார்த்துட்டு சண்டைபோட்டதே தவிர நிறுத்துச்சீங்கறியா - ஊகும்” (முட், ப.21)

வன்முறை காட்சிகளைப் பார்ப்பது, ரசிப்பது சிலருக்குப் பிடித்தமான நிகழ்வாக இருப்பதே சமூகக் கொடுமைகளுக்குக் காரணமாக அமைகிறது. மக்களைக் கவரும் தொடர்புசாதனங்களிலும் நிஜவாழ்க்கையிலும் இது போன்ற வன்முறைக் காட்சிகளைத் தவிர்ப்பது தீய எண்ணங்களிலிருந்து அவர்களைத் தற்காத்துக் கொள்ளும்.

**பெண்களை இழிவுசெய்யும் மனநிலை**

சங்க காலத்தில் பெண்கள் அறிவுடையவர்களாகவும் வீரம் மிக்கவர்களாகவும் சுயமாக முடிவெடுக்கும் சிந்தனைத் திறனுடனும் வாழ்ந்தனர். இடைக்காலத்தில் பெண்கள் கணவன் நிழலாகவே வாழவேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. பெண்ணுக்குச் சுதந்திரம் அளித்தால் அது அவளை நெறிதவறிச் செல்ல வாய்ப்பாக்கும் என்று எண்ணினர். ஆண்களின் அடிமைகளாகப்

பெண்கள் நடத்தப்பட்டனர். பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்தே கி.பி 1835 ஆம் ஆண்டு மெக்காலே கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டது. பெண்களும் கல்வி கற்று ஆளுமைத் திறனுடன் வாழ்ந்தாலும் இன்றும் பெண்கள் அவமானத்திற்கு உட்படுத்தப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இத்தகைய இழிநிலை இந்நாடகத்திலும் சுட்டப்படுகின்றது.

உடைந்த முட்டை காரணமாகச் சண்டையிட்ட அவர்களே சமரசம் செய்து கொள்கிறோம் எனும் போது நீங்கள் ஏன் பிரச்சினை செய்கிறீர்கள்? என்று ஒரு பெண் கூற, அவர்கள்,அவளை கேலி செய்கின்றனர்.

“முத : யார்ரா அது
இரண்: பொம்பிளை (இகழ்ச்சியாக)
முத : ஒரு பொம்புளை ஒரு பொம்புளையா வந்து நமக்கெல்லாம்
புத்தி சொல்றது
இரண் : சே நமக்கெல்லாம் மகா கேவலம்பா இது
மூன் : அதானே, ஒரு பொம்பிளையா புத்தி சொல்றது
நான் : யார்ரா அவ இழுத்தாங்கடா அவள இங்க
மூன் : பொட்டக்கோழி கூவியா பொழுது விடியப் போவுது
நான் : அகிலமெல்லாம் கட்டி ஆண்டாலும் ஆணுக்குப்
பெண்ணு அடிமைதானே” (முட், ப.24)

பெண்களை இழிவாகப் பேசுகின்ற மனநிலை, ஆணாதிக்கப் போக்கு இன்றும் எச்சங்களாக சமூகத்தில் உலவிக்கொண்டிருப்பது உண்மையே. பெண்ணடிமையை எதிர்த்து எண்ணற்றத் தலைவர்கள் குரல் கொடுத்த பின்னரும் திருந்தாத மனிதர்கள் வலம் வருவது வேதனையானது.

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கியிவ் வையம் தழைக்குமாம்”3

என்கிறார் பாரதி. அடிப்படை மனிதாபிமானம் கூட இல்லாமல் இல்லத்தரசிகளை அடிமைகளாக நடத்தும் மனநிலையும் ஆண் பேச்சுக்கு எதிர் குரல் கொடுக்கும் உரிமை பெண்களுக்கு இல்லை என்ற எண்ணமும் கொடூரமான வன்முறைகளைக் கையாளும் மனநிலை இருந்ததன் காரணமாகவே ஐக்கிய நாடுகள் சபை இதற்கான தீர்மானத்தை முன்னெடுத்தது.

“பெண்களுக்கு எதிரான அனைத்துவித பாகுபாடுகளை நீக்கும் கூட்டு உடன்பாடு 1979ஆம் ஆண்டு டிசம்பர்,18-ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 20 நாடுகள் இந்த உடன்பாட்டினை ஒப்புக்கொண்ட பின்னர் இது சர்வதேச உடன்படிக்கையாக 1984ஆம் ஆண்டு செப்டம்பர் 3ஆம் தேதி அமலுக்கு வந்தது. தற்பொழுது 134 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தியா 1993ஆம் ஆண்டு ஜுன் 25ஆம் தேதி அன்று இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது.” 4

பெண்கல்வி மற்றும் சட்டங்கள் இயற்றப்பட்டதன் காரணமாக இத்தகைய இழிநிலை குறைந்தும் அதற்கான எழுச்சியும் போராட்டங்களும் பெருகிவரும் காரணத்தினாலும் குற்றங்கள்

குறைந்துள்ளன. எனினும் பெரிய அளவிலான மாற்றத்திற்குக் கையூட்டுச் சமூகம் முட்டுக்கட்டை போடுகிறது என்பதே உண்மை.

**அதிகார வர்க்கத்தின் ஆணவம்**

கிராம மக்களிடையே எழும் சிக்கல்களைத் தீர்ப்பது போன்ற பாவனையில் அவர்களை ஏமாற்றி பணம் வசூலிப்பதும் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திக் கொல்வதுமான இழிசெயல்களில் ஈடுபடும் ஒரு கூட்டம் தலைமைத்துவம் பெற்றிருந்ததை இந்நாடகம் பதிவு செய்கிறது. துரை, அதிசேவகன், சேவகர்கள் என்று அவர்களுக்குப் பெயரிட்டு அழைக்கின்றனர். அவர்களே வழக்குகளுக்குத் தீர்ப்பளிக்கின்றனர். மக்கள் தங்களது இயலாமையின் காரணமாக அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர். ஆனால் மனதிற்குள் அவர்களைப் பற்றிய வெறுப்புணர்வே மேலோங்கி நிற்கின்றது.

தனக்கு வளமான ஒரு வழக்கு வந்துவிட்டதாகக் கருதி சேவகன் முனுசாமியையும் இளைஞனையும் கோட்டைக்கு அழைத்துக் செல்கிறான். படிக்காத வயதான முனுசாமியிடம் அசிங்கமான வினாக்களை எழுப்பியதோடு, அவரைச் சிறைவைக்கின்றனர். உடைந்த முட்டைகள் உன் கோழியிட்ட முட்டைதான் என்பதற்கு என்ன சாட்சியம் இருக்கிறது என்றெல்லாம் கேலி பேசுகின்றனர்.

“உன் கோழிகளும் வெள்ளையாத்தான் முட்டை இடுது. ஊர் கோழிகளும் வெள்ளையாத்தான் இடுது. மற்ற கோழிகளெல்லாம் எந்த முறையில் முட்டை இடுதோ அந்த முறையில் தான் உன் கோழிகளும் இடுது. எனவே மேற்படி முட்டைகளுக்கும் உனக்கும் எந்த பாத்யதை என்கிறது இன்னும் நிரூபணம் ஆகலே - உன் முட்டை உன்னோடது இல்ல. இதாம்பா சட்டம் - சட்ட்ட்டம்னா சும்மாவா - சட்ட்ட்டம்பா!” (முட், ப.39)

என்கிறான் அதிசேவகன். முனுசாமி தனது மனைவிக்கு ரவிக்கைத் துண்டு வாங்குவதற்காக வைத்திருந்த பணத்தைக் கொண்டு டீ, சிகரெட், வத்திப்பெட்டி வாங்கி வருமாறு அனுப்புகின்றனர். முட்டையை உடைத்த இளைஞனிடம் ஐம்பது ரூபாயை அபராதமாகப் பெற்றுக் கொண்டு அவனை விடுவிக்கின்றனர்.

“சித்திரவதைக்கோ கொடூரமான மனிதத்தன்மையற்ற அல்லது இழிவான நடத்துமுறை அல்லது தண்டனைக்கோ யாரையும் ஆட்படுத்தக் கூடாது.” 5 (விதிஎண்.5)

என்ற சட்டம் நடைமுறையிலிருப்பினும் அதிகார வர்க்கம் தனது ஆதிக்கத்தால் ஏழைகளை அடக்கியாள நினைப்பதும் துன்புறுத்துவதும் சட்டத்திற்கு எதிரான செயல்பாடாகவே அமைகிறது.

**பாலியல் வன்முறை**

பெண்களின் உடல் அமைப்பும் மென்மைத் தன்மையும் ஆண்களை விட அவர்களைப் பலவீனப்படுத்துகிறது. பெண்கள் விழிப்புணர்வு அடைந்த இக்காலத்திலும் சமத்துவம் என்ற நிலை முழுமையாக எட்டப்படவில்லை. கல்வி கற்று உயர்ந்த பொறுப்புக்களை வகித்தாலும் பாலியல் சீண்டல்களுக்கு அவர்கள் ஆட்படுவது வருத்தத்திற்குரியது. குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத்தரும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பினும் பணபலத்தால் விடுதலையாவது தொடர்கதையாகவே உள்ளது.

“பெண்ணை ஒரு போகப்பொருளாகக் கருதும் ஆண் தான் விரும்பியபோது பெண்ணை அனுபவிக்க வன்முறையைப் பயன்படுத்துகிறான். பாலியல் செயலுக்கான வன்முறை என்பதால் இது பாலியல் வன்முறை என்று அழைக்கப்படுகிறது. ” 6

நாடகத்தில் முனுசாமியைத் தேடி கோட்டைக்குள் வருகிறாள் அவனது மனைவி. பதினெட்டு வயதான அப்பெண்னணப் பார்த்த அதிசேவகன், “வெள்ளரிப் பழம் மாதிரி கண்கொள்ளாம நிக்கறே - ஆமா இந்த கிழவனைக் கட்டிக்கிட்டு என்ன சுகத்தைக் கண்டே நீயி? ஊருல மாப்பிள்ளையா கிடைக்கல்லே உனக்கு? ” (முட், ப.52) என்று கிண்டலடிக்கிறான்.

தனது கணவன் உத்தமன் என்றும் பசி தாங்காத அவனுக்குச் சமைத்துக்கொண்டு வந்திருப்பதாகவும் அவரைப் பார்க்க வேண்டுமென்றும் கூறுகிறாள். ஆனால் அவர்கள், அவளது சாப்பாட்டையும் அவளையும் அனுபவிக்க ஆசைப்படுகின்றனர். துரை என்ற மனிதாபிமானமற்ற மிருகம் அவளது கற்பைச் சூறையாடி கொன்று கோட்டையிலுள்ள மரத்தில் தூக்கில் தொங்க வைத்தது. பத்திரிகையில் வந்த செய்தியும் வயிற்றுவலியினால் அவள் தூக்கிட்டதாகவே பதிவு செய்கிறது. இதனை வாசிக்கும் ஊர்மக்களும் இது அநியாயம் என்று தெரிந்தாலும் பணபலம், பதவிபலத்தின் முன் அவர்கள் வாயடைத்து நிற்கின்றனர்.

“இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 498(ஏ)-இன்படி பெண்ணின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிப்பவருக்கு ஒரு ஆண்டு சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். பாலியல் வன்முறைக்கு ஆளானோர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கலாம். ” 7

இன்றைய சட்டங்கள் பெண்களுக்குச் சாதகமாகக் கொண்டுவரப்பட்டாலும் குற்றவாளிகளைக் கைது செய்ய காலம் தாழ்த்துகின்ற போது, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பல்வேறு மகளிர் அமைப்புகளும் சமூகத் தொண்டு நிறுவனங்களும் சமூக ஆர்வலர்களும் போராட்டங்களை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனைப் பெற்றுக் கொடுக்கும் மனநிலை வளர்ந்துள்ளது பாராட்டுதற்குரியது. இத்தகைய குற்றச் செயல்களில் இளைஞர்கள் ஈடுபடுவதற்குச் சமூக ஊடகங்களும் ஒரு காரணமாக அமைகிறது. வேலையில்லாத் திண்டாட்டம், சமூக விரோதிகளின் தொடர்பால் வழிப்பறி, திருட்டு சமபவங்களில் ஈடுபடுதல், குற்றவாளிகளை முறைப்படி கைது செய்ய வேண்டிய காவல்துறையின் அலட்சியப் போக்கு போன்றவை குற்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது. படித்த இளைஞர்களே குற்றங்கள் புரிவது வருத்தத்திற்குரியது. சுயக்கட்டுப்பாட்டுடன் நேர்மையாக உழைக்கும் மனநிலை வளர்ந்தாலொழிய குற்றங்கள் குறைய வாய்ப்பில்லை.

**முடிவுரை**

மக்களின் நிம்மதியான வாழ்வுக்குத் தடைக்கற்களாக இருப்பவை ஆண்டான்-அடிமை என்ற பாகுபாடு, மக்கள் நலனில் அக்கறையில்லாத தலைமை, லஞ்சம்,ஊழல், வன்முறை எண்ணங்கள், பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் போன்றவையாகும். பிரபஞ்சனின் நாடகம் இதனை உள்ளபடியே வெளிக்காட்டி சமூக மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் இத்தகைய தீமைகள் களையப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இன்று சட்டங்கள் மூலமாக குற்றவாளிகள் தண்டனை பெற்று வருவதும் படைப்புகள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஆசிரியரது

படைப்பின் வெற்றியாகவே அமைகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. போ.வே.சோமசுந்தரனார், குறுந்தொகை-305
2. போ.வே.சோமசுந்தரனார், பட்டினப்பாலை, பா.76,77
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.208
4. ச.ஆரோக்கிய மணிராஜ், மனித உரிமைக்கல்வி, ப.24
5. எஸ்.ஸ்டீபன் குழந்தைசாமி, நமது அடிப்படை உரிமைகளும் கடமைகளும், ப.100
6. விமலா, மகளிர் குரல், ப.25
7. கெ.எஸ்.செண்பகம், பெண் உரிமைச்சட்டம், ப.47

**துணைநூற்பட்டியல்**

1. ஆரோக்கிய மணிராஜ. ச., மனித உரிமைக்கல்வி, தியாகராஜ் நிறுவனர்,இந்திய மனித உரிமை கல்வி இயக்ககம்,முதற்பதிப்பு – 2001

2. செண்பகம் கெ.எஸ. பெண் உரிமைச்சட்டம்,சாந்தி பதிப்பகம்,சென்னை – 2

3. சோமசுந்தரனார் போ.வே., குறுந்தொகை,தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டி.டி.கே சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 600 018, முதற்பதிப்பு – 1952

4. சோமசுந்தரனார் போ.வே., பட்டினப்பாலை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டி.டி.கே சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 600 018 முதற்பதிப்பு – 1952.

5. பாரதியார்.,பாரதியார் கவிதைகள்,பூம்புகார் பதிப்பகம்,63, பிராட்வே, சென்னை - 600 108, மூன்றாம் பதிப்பு - டிசம,;1986

6. ஸ்டீபன் குழந்தைசாமி. எஸ்., நமது அடிப்படை உரிமைகளும் கடமைகளும், சமூகச்சிந்தனை செயல்பாட்டு ஆய்வு மையம், மதுரை - 1,

7. விமலா., மகளிர் குரல் - 1991